கலசப்பாக்கம் தொகுதி, கோவிலூர் பஞ்.க்கு உட்பட்ட மலைவாழ் மக்களிடம் எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி நன்றி தெரிவித்தார்.

கோவிலூர் மலைக்கிராம மக்களுக்கு எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி நன்றி

■ கலசப்பாக்கம் ஜூன் 10–

கலசப்பாக்கம் தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்எல்ஏ அக்ரி கிருஷ்ணமூர்த்தி, நேற்று ஜவ்வாதுமலை யூனியனுக்கு உட்பட்ட கோவிலூார் பஞ்.க்கு உட்பட்ட கிராமங்களுக்கு சென்று நன்றி தெரிவித்தார். அப்போது அவர் பேசியதாவது:ஜவ்வாதுமலை மக்கள் எப்போதும் அதிமுக மீன்மயான இரட்டை இலையையும் மறைந்த முதல்வர் எம்ஜிஆரையும் நினைவில் வைத்துள்ளீர்கள். அதன் காரணமாகவே, நீங்கள் அதிமுகவுக்கு அதிக எண்ணிக்கையில் ஓட்டு போட்டுள்ளீர்கள்.

உங்களுக்கு தேவையான எல்லா அடிப்படை வசதிகளையும் கண்டிப்பாக நிறைவேற்றி தருவேன். உங்களுக்காக திருவண்ணாமலை கலெக்டரை சந்ித்து சாலை மேம்பாடு, குடிநீர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை செய்துத்தர வேண்டும் என வலியுறுத்தியுள்ளேன்.

இவ்வாறு பேசினார். நிகழ்ச்சியில் அதிமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

ரூ.24 லட்சத்தில் புதுப்பிக்கப்பட்ட ஆதிதிராவிடர் அரசுப்பள்ளி திறப்பு

■ வந்தவாசி, ஜூன் 10–

வந்தவாசி அடுத்த கூவனூரில் ரூ.24 லட்சம் மதிப்பில் புதுப்பிக்கப்பட்ட ஆதிதிராவிடர் அரசு தொடக்கப்பள்ளியை மாவட்ட கல்வி அலுவலர்கள் திறந்து வைத்தனர்.

வந்தவாசி தாலுகா, தெள்ளார் யூனியனுக்கு உட்பட்ட கூடலூர் கிராமத்தில் உள்ள ஆதிதிராவிடர் அரசு தொடக்கப் பள்ளி, நடிகர் விஜய் சேதுபதியின் பெயரில் செயல்படும் வள்ளலார் வேலைவாய்ப்பு சேவை இயக்கத்தின் ஒருங்கிணைப்பிலும், ஆம்மினால் ஒம்னி கனெக்ட் இந்தியா தனியார் நிறுவனத்தின் சமூகப் பொறுப்பு நிதியுதவியுடனும் 24 லட்சம் ரூபாய் மதிப்பில் புதுப்பிக்கப்பட்டது. இதன் திறப்பு விழா நேற்று நடந்தது.

வள்ளலார் வேலைவாய்ப்பு சேவை இயக்கத்தின் நிறுவனர் வீரராகவன் தலைமை வகித்தார். ஆம் மினால் ஒம்னி கனெக்ட் இந்தியா நிறுவனத்தின் சார்பில் கப்பாராமன், கோவிந்தராஜன், பூங்கொடி மற்றும் இயக்கத்தின் ஊழியர்களான பால முரளி கிருஷ்ணன், சுந்தர், சுவாதி, சஞ்சய் ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னாள் மாணவர் தீபநாதன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளர்களாக மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் செந்தில்குமரன், மாவட்ட கல்வி அலுவலர்கள் முனிராஜ், வீரமணி (ஆரம்பப் பள்ளி), வட்டார கல்வி அலுவலர்கள் குணசேகரன், பச்சையப்பன், வட்டார மைய மேற்பார்வையாளர் ராஜா, ஆதிதிராவிடர் நல தாசில்தார் கதா ஆகியோர் கலந்துகொண்டு, புதுப்பிக்கப்பட்ட வகுப்பறைகள் மற்றும் சுற்றுச்சுவரை திறந்து வைத்து மாணவர்களிடையே பேசினர். இதில் பள்ளி தலைமை ஆசிரியர் சுரேஷ், கூடலூர் முன்னாள் பஞ். தலைவர் கார்த்திகேயன், ஊர் முக்கிய பிரமுகர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம மக்கள் கலந்துகொண்டனர். ஏற்பாடுகளை வள்ளலார் சேவை இயக்கத்தினர் செய்தனர்.

துணி தைக்க சென்ற இளம்பெண் மாயம்

■ சேத்துப்பட்டு, ஜூன் 10–

சேத்துப்பட்டு அடுத்த தேவிகாபுரத்தைச் சேர்ந்தவர் மலர்கொடி. இவரது கணவர் கதிரேசன் 4 ஆண்டுக்கு முன்னர் இறந்து விட்டார். இவர்களுக்கு ஸ்ரீமதி (23) என்ற மகளும், ஆதிகேசவன் (20) என்ற மகனும் உள்ளனர்.

கடந்த 7ம் தேதி ஸ்ரீமதி, போளூர் சேத்துப்பட்டு சாலையில் உள்ள தையல் தொழிலாளி ரங்நோவிடம் துணி தைக்க கொடுப்பதாக கூறிவிட்டு, வீட்டில் இருந்து வெளியே சென்றார். ஆனால் நீண்ட நேரமாகியும் வீடு திரும்பவில்லை.

இதனால் அதிர்ச்சியடைந்த மலர்கொடி மற்றும் உறவினர்கள், பல இடங்களில் தேடிப் பார்த்தும் ஸ்ரீமதி குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை. இதுகுறித்து மலர்கொடி கொடுத்த புகாரின் பேரில் சேத்துப்பட்டு போலீசார் வழக்குப்பதிவு செய்து, மாயமான இளம்பெண்ணை தேடி வருகின்றனர்.

ஆம்பூரைச் சேர்ந்த கான்டிராக்டர் விபரீத முடிவு

■ ராணிப்பேட்டை, ஜூன் 10–

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் மல்லிகை தோப்பு பகுதியை சேர்ந்தவர் மதன்குமார் (42). இவர் ராணிப்பேட்டை சிப்காட் புளியந்தாங்கலில் ஒரு வீட்டில் வாடகை எடுத்து தங்கியிருந்தார். சிப்காட்டில் ஒரு ஷூ கம்பெனியில் கான்டிராக்ட் எடுத்து ஜாப் ஒர்க் செய்து கொண்டிருந்தார்.

இந்நிலையில் நேற்று மதன்குமார், அவர் தங்கியிருந்த வீட்டில் தூக்கு மாட்டி தற்கொலை செய்து கொண்டார்.இவருக்கு ஒரு மகன், மகள் உள்ளனர். சிப்காட் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

செங்கல் விற்ற தகராறில் 3 பேர் கைது

■ வந்தவாசி, ஜூன் 10–

வந்தவாசி அடுத்த மழையூர் புதுார் கிராமத்தைச் சேர்ந்தவர் ரங்கநாதன் (56). செங்கல் சூளை நடத்தி வருகிறார். அதே பகுதியைச் சேர்ந்தவர் அவரது உறவினர் மணவாளன் (60). ரங்கநாதன், தேசூரை சேர்ந்த ஒருவருக்கு செங்கல் விற்பனை செய்திருந்தார். அந்த நபரிடம் மணவாளன், ரங்கநாதன் நிர்ணயித்த விலையை விட குறைவாக வழங்குவதாக கூறியதாக தெரிகிறது.

இதுதொடர்பாக, 'நான் விற்பனை செய்த நபரிடம் ஏன் குழப்பம் ஏற்படுத்துகிறீர்கள்' என ரங்கநாதன் கேட்டுள்ளார். இதனால் இருவருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு கைக்கலப்பாக மாறியது. அப்போது ரங்கநாதனுக்கு ஆதரவாக அவரது மனைவி நவநீதம் (48), மகன் சதீஷ் (35), மருமகள் பாரதி ஆகியோரும், மணவாளனுக்கு ஆதரவாக அவரது மகன் சத்தியராஜ் (40), பேரன் கோகுல் (19) ஆகியோரும் மோதலில் ஈடுபட்டனர்.

இதில் காயமடைந்த மணவாளன், கோகுல், நவநீதம் மற்றும் பாரதி ஆகியோர் வந்தவாசி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதுகுறித்து ரங்கநாதன், சத்தியராஜ் ஆகியோர் தனித்தனியாக கொடுத்த புகாரின் பேரில் வடவணக்கம்பாடி போலீசார் ரங்கநாதன், சதீஷ், சத்தியராஜ் ஆகிய 3 பேரை கைது செய்தனர். மேலும், தலைமறைவான 4 பேரை போலீசார் தேடி வருகின்றனர்.

நாளை விவசாயிகள் குறைதீர் கூட்டம்

■ செய்யாறு, ஜூன் 10–

திருவண்ணாமலை கலெக்டர் வந்தனா கார்க் உத்தரவின்படி செய்யாறு கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் நாளை (11ம் தேதி) காலை 10.30 மணியளவில் அனக்காவூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் நடக்க வுள்ளது. கூட்டத்துக்கு செய்யாறு சப் கலெக்டர் அம்பிகா ஜெயின் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் விவசாயம் மற்றும் தோட்டக்கலைத் துறை, வேளாண் வணிகம், வேளாண் பொறியியல், கால்நடை பராமரிப்பு கூட்டுறவு, வருவாய்த் துறை, பொதுத்துறை வங்கிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்துகொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க உள்ளனர்.

எனவே, செய்யாறு, வெம்பாக்கம், சேத்துப்பட்டு, வந்தவாசி தாலுகா பகுதிகளுக்கு உட்பட்ட விவசாயிகள் கூட்டத்தில் பங்கேற்று பயனடையுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

திருட்டு பைக்குகளுக்கு போலி ஆர்சி புக் தயாரிப்பு போலீசாரின் வாகன சோதனையில் 'திடுக்': 4 பேர் கைது

■ கலசப்பாக்கம், ஜூன் 10–

கலசப்பாக்கம் அடுத்த கடலாடி போலீசார் அருணகிரிமங்கலம் பகுதியில் கடந்த 7ம் தேதி இரவு வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த கார்த்தப்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திருமூர்த்தி (25) என்பவரின் பைக்கை நிறுத்தி சோதனை செய்தனர். ஆனால், பைக்குக்கு தேவையான ஆவணங்கள் இல்லாததால், அதற்கு போலீசார் அபராதம் விதித்தனர். அப்போது, சேத்துப்பட்டு தாலுகாவைச் சேர்ந்த சையத் என்பவருக்கு, அபராதம் விதித்துள்ளதாக எஸ்ஐம்எஸ் சென்றுள்ளது. அந்த எஸ்எம்எஸ்சை பார்த்தவுடன் சையத் மின்னல் வேகத்தில் கடலாடி போலீசாரிடம் வந்து, ''நான் ஏற்கனவே எனது பைக்கை தொலைந்ததது குறித்து சேத்துப்பட்டு போலீசில் புகார் செய்துள்ளேன். எனவே, எனது பைக்கை கொடுங்கள்'' என்று கேட்டுள்ளார். அப்போது போலீசார் திருமூர்த்தி கொண்டு வந்த பைக்கை காண்பித்துள்ளனர்.

ஆனால், ''இந்த பைக் என்னுடையது அல்ல. ஆனால், பைக் எண் மட்டும் என்னுடையது' என்றும், தனது பைக் ஆர்சி புக்கை பைனான்ஸ் கம்பெனியில் அடகு வைத்திருந்ததாகவும் சையத் கூறியுள்ளார். பின்னர், போலீசார் அவர்களது பாணியில் திருமூர்த்தியிடம் விசாரித்துள்ளனர். அதற்கு அவர், சேத்துப்பட்டு தாலுகாவைச் சேர்ந்த சாஜியாய் என்பவரிடம் 30 ஆயிரம் கொடுத்து தான் இந்த பைக்கை வாங்கியதாக ஒப்புக்கொண்டார். மேலும், தான் வாங்கிய பைக்குக்கு சையத் உரிமை கோரியது பற்றி திருமூர்த்தி ஆதமங்கலம்புதூர் போலீசில் புகார் தெரிவித்துள்ளார்.

நம்பர் பிளேட் இல்லாத வண்டிகள்

கலசப்பாக்கம் பகுதியில் அரசின் அனுமதி பெறாமல் நூற்றுக்கும் அதிகமான செங்கல் சூளைகள் இயங்கி வருகின்றன. இதற்கு தேவையான செம்மண் ஓட்டுபவர்கள் பொக்லைன் எந்திரத்துக்கோ அல்லது டிராக்டருக்கோ நம்பர் பிளேட் இல்லாமலேயே அவற்றை ஓட்டி வருகின்றனர். மேலும், இப்பகுதியில் ஏராளமான பைக்குகள் நம்பர் பிளேட் இருந்தும் திருட்டு பைக்குகளாக உள்ளன. இதனால், பல குற்ற சம்பவங்கள் அரங்கேறுகின்றன.

எனவே, ஆதமங்கலம்புதூர் போலீஸ் ஸ்டேஷனில் நேர்மையான அதிகாரிகளை நியமித்தால், இத்தகைய குற்றங்களை தடுக்க முடியும் என்று அப்பகுதி மக்கள் கூறுகின்றனர். செவி சாய்க்குமா மாவட்ட நிர்வாகம்?

இதையடுத்து, ஆதமங்கலம்புதூர் மற்றும் கடலாடி போலீசார் ஒன்றிணைந்து விசாரணை நடத்தினர். இதில் மாவட்டத்தின் பல இடங்களில் இருந்து புதிய பைக்குகளை திருடி வந்து, அந்த பைக்குகளுக்கு ஆதமங்கலம்புதூர், எடப்பிறை ஆகிய இரு சேவை மையத்தில் போலியாக ஆர்சி புக் தயார் செய்து, அந்த திருட்டு பைக்கை கலசப்பாக்கம் தாலுகாவைச் சேர்ந்த வாலிபர்களுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்து வந்தது அம்பலமானது. மேலும் இந்த நூதனமான திருட்டில் ஈடுபட்ட 4 பேரை இதுவரை போலீசார் கைது செய்துள்ளனர். மேலும், இந்த திருட்டில் தொடர்புடையவர் யார் யார் என்பதையும் தீவிரமாக விசாரித்து வருகின்றனர்.

இன்சூரன்ஸ் நிறுவன ஊழியர் பைக் திருட்டு

■ ஆரணி, ஜூன் 10–

ஆரணி அடுத்த விண்ணமங்கலம் கிராமத்தில் வசிப்பவர் குடியரசு (38). தனியார் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். இந்நிலையில் கடந்த 6ம் தேதி குடியரசு ஆரணி அவுசிங் போர்டு அருகே உள்ள இன்சூரன்ஸ் நிறுவனம் முன்பாக தனது பைக்கை நிறுத்திவிட்டு உள்ளே சென்றுள்ளார்.

வேலை முடிந்து வெளியே வந்து பார்த்த போது, பைக் திருடு போனது தெரியவந்தது. அதிர்ச்சி அடைந்த குடியரசு இதுகுறித்து ஆரணி டவுன் போலீஸ் ஸ்டேஷனில் கொடுத்த புகாரின் பேரில், போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

பண சிக்கனம்
குடும்பத்துக்கு நலம்
மின் சிக்கனம்
நாட்டுக்கு நலம்

ஸ்ரீவித்யா பீடத்தில் பைரவருக்கு அஷ்டமி பூஜை

■ ராணிப்பேட்டை, ஜூன் 10–

ராணிப்பேட்டை சிப்காட் ஸ்ரீவித்யா பீடத்தில் கவர்ணாகர்ஷண பைரவருக்கு அஷ்டமி பூஜை நடந்தது.

இதையொட்டி நேற்று முன்தினம் மாலை ஸ்ரீவித்யா பீடம் பாரதி முரளிதர சாமிகள் தலைமையில் பைரவருக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம் நடந்தது.

பைரவருக்கு செவ்வரளி, சாமந்தி மற்றும் சிவப்பு நிற மலர்கள் குட்டப்பட்டன. நெய் தீபம் ஏற்றப்பட்டது. தயிர் சாதம், மிளகு சாதம் மற்றும் வடை படையலிடப்பட்டது.

பக்தர்கள் பைரவ காயத்ரி மந்திரத்தை 108 முறை பாராயணம் செய்தனர். சிவபெருமானின் அவதாரமான காலபைரவரை வழிபட்டால் பயம் நீங்கி, தடைகள் அகன்று, செல்வ வளம் பெருகும். தடைபட்ட காரியங்கள் கைகூடும், மன தைரியம் அதிகரிக்கும் என பாரதி முரளிதரசாமிகள் தெரிவித்தார். தொடர்ந்து பிரசாத விநியோகம் அன்னதானம் நடந்தது.

நகராட்சி ஆக்கிரமிப்பு இடம் அகற்றம்

ஆரணி டவுன், பெரிய ஜெயினர் கோயில் தெருவில் நகராட்சிக்கு சொந்தமான ஆக்கிரமிப்பு இடம் பொக்லைன் மூலம் அகற்றப்பட்டது.

■ ஆரணி, ஜூன் 10–

ஆரணி டவுன், கொசப்பாளையம் பெரிய ஜெயினர் கோயில் தெருவில் வசிப்பவர் பத்மராஜ். இவர், தனது வீட்டுக்கு அருகே நகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கொட்டகை அமைத்து, பயன்படுத்தி வந்துள்ளார். இதுகுறித்து அப்பகுதியைச் சேர்ந்த ஸ்ரீபாலு என்பவர் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கை விசாரித்த நீதிபதி, ஆக்கிரமிப்பை அகற்றி கோர்ட்டுக்கு அறிக்கை தாக்கல் செய்யுமாறு ஆரணி நகராட்சி கமிஷனர் வேலவனுக்கு உத்தரவிட்டார்.

இதையடுத்து, கமிஷனர் வேலவன் தலைமையில் நகராட்சி ஊழியர்கள், இன்ஸ்பெக்டர் அன்பரசி தலைமையில் போலீசார் மற்றும் மின்வாரியத்துறை அதிகாரிகள் நேற்று சம்பந்தப்பட்ட இடத்துக்கு பொக்லைன் எந்திரத்துடன் சென்று ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்ட கொட்டகையை இடித்து தரைமட்டமாக்கி அப்புறப்படுத்தினர். இதனால், அப்பகுதியில் சலசலப்பு ஏற்பட்டது.

23-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 12.07.1944 மறைவு 10.06.2003

'பாரதி பணிச்செல்வர்'

அ.குலசேகரன் M.A.,M.Ed.,

நல்லாசிரியர் விருது பெற்ற ஓய்வு தலைமை ஆசிரியர், கண்ணமங்கலம்.
...என்றும் உங்கள் நினைவால் வாழும்...

மனைவி: **கு.மலர்வேணி**
மகன்கள்: **கு.திருமால்** M.Sc.,B.Ed., B.P.Ed., ஆசிரியர்
கு.தாமோதரன் M.A.,B.Ed., ஆசிரியர்
மருமகள்கள்: **தி.விஜயலட்சுமி** M.Sc.,M.Ed., RBP., MA B.Ed., LLB.,
தா.முத்துக்கண்ணு M.Sc.,B.Ed., M.A.,PGDM.T.
மகள்: **கு.உஷா** B.Sc. (நர்ஸ்) – **ஈரோடமேகவு** B.Sc. B.A. Clip (Police)
பேரன்/பேத்தி: **தா.நிருஞ்சனாஸ்ரீ. ம.மோனிஷ்.**
பெண்டாளசாலைஷ்ந்து, கண்ணமாங்கலம், ஆரணி வட்டம், திமலை மா.

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி

தோற்றம் 01.07.1961 மறைவு 10.06.2021

முந்த வழக்கறிஞர்
திரு. T.G.எழிலரசன் வழக்கறிஞர்
வந்தவாசி

மண்ணில் மறைந்து விண்ணுலகில் வாழும் எங்கள் இதய தெய்வமே!
இந்நாளில் எங்கள் இதய அஞ்சலியை காணிக்கையாக்குகிறோம்...
....நினைவை என்றும் போற்றும்....

இயக்குநர்கள்: **ஸ்ரீ முத்தாலம்மன் கல்வி குழு, தெள்ளார்**
இயக்குநர்கள்: **VOLTAMP ELECTRICAL COMPANY, BAHRAIN**
TGE elite gold finance-Vandavasi
வந்தவாசி வழக்கறிஞர்கள் சங்கம்
... என்றும் உங்கள் நினைவுகளுடன் வாழும்...

மனைவி: **T.G.E.யோகாம்பிகை,** மகன்: **T.G.E.ஜெயவர்மன்** B.Tech **பஹ்ரைன் (GULF)**
மருமகள்: **J.சங்கீதா,** பேரன்: **J.வியாஷ்வர்மன்** பேத்தி: **J.ஜோஷிகா வர்மன்**
மற்றும் **குடும்ப உறவினர்கள், நண்பர்கள் - வந்தவாசி**

பேங்க் ஆஃப் பரோடா Bank of Baroda

ஆரணி கிளை
தெ. 51 to 53, **சத்தியஷா்த்தி சாலை,**
111A, பிக் பஜார் தெரு, ஆரணி - 632 301.
போன் : 04173-227633. Email: arani@bankofbaroda.co.in

(bankNet போர்ட்டலில் நடத்தப்படும் ஏலத்திற்கான செயல்திறன்களில் வெளியிடப்படும் வருங்காலை விற்பனை அறிவிப்பு)

அசையா சொத்துக்களின் விற்பனைக்கான மின் ஏல விற்பனை அறிவிப்பு

பிற்சேர்க்கை IV-பின்பக்கம் (விதி 6(2) மற்றும் 8(6)வைப் பார்க்கவும்)

2002-ம் ஆண்டு கடன்பெற்றோர்களுக்கான அமலாக்கச்சட்டம் விதிகளின் கீழ் 6(2) மற்றும் 8(6) இன் கீழ் வைக்கப்பட்டுள்ள அசையாச் சொத்துக்களை மின் ஏலம் மூலம் விற்பனை செய்தல் அறிவிப்பு.

கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் ஆகியோருக்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இந்த அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிட்டுள்ள சொத்துக்களை **பாங்க் ஆஃப் பரோடா வங்கியின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்களால் சுவாதீனம் செய்யப்பட்ட கீழே உள்ள சொத்துக்கள் **"எங்கு உள்ளதோ அப்படியே" "எப்படி உள்ளதோ அப்படியே" மற்றும் " என்ன இருக்கிறதோ அதே நிலையில்"** என்ற அடிப்படையில் வங்கியில் பெறப்பட்ட கடனுக்காக கீழே குறிப்பிட்டுள்ள கடன் மற்றும் செலவுகளை திரும்பப் பெறும் நோக்கத்துடன் மின் ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர் / ஜாமீன்தாரர் / அடமானதாரர் விபரம், நிலுவைத் தொகை விபரம், சொத்து விபரம் குறைந்தபட்ச கேட்பு விலை, மின்னணு ஏலத் தேதி மற்றும் நேரம், டேவணித் தொகை மற்றும் ஏல அதிகாரிப் தொகை ஆகியவை கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

1). M/s.Sri Kannabiran Paddy & Rice Traders, உரிமை : திரு.மா. **G.வியூயலட்சுமி,** (ரூ.44, நச்சுரா சாலை, கொசப்பாளையம், ஆரணி தாலுகா, திருவண்ணாமலை மாவட்டம் - 632 301. 2).திரு.மா.**G.வியூயலட்சுமி,** (ரூ.49, நீதிபதி விஜயராங்கம் தெரு, சைதாபேட்டை, ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்-632 301. 3). திரு. **S.விஜயகிருஷ்ணன்** (ஜாமீன்தாரர்) 1/1, கோவிந்தன் தெரு, சோலை நகர், நாயக்கன்பாளையம், சைதாபேட்டை., ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்-632 301. 4). திரு. **G.ஹரணசம்பத்** (ஜாமீன்தாரர்), ரூ.49, நீதிபதி விஜயராங்கம் தெரு, சைதாபேட்டை, ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்-632 301.

கடன் கணக்கு எண். 51200400000039 09.06.2026 வரை நிலுவை தொகை ரூ.10,21,764.15/- மேலும் 07.06.2026 அன்று முதல் வட்டி மற்றும் இதர கட்டணங்கள்.

அசையாச் சொத்தின் சுருக்கமான விவரங்கள் மற்றும் ஏதேனும் விலைவங்கங்கள் இருப்பின்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பதிவு மாவட்டம், ஆரணி சார் பதிவு மாவட்டம், ஆரணி தாலுகா, ஆரணி நகரம், சைதாப்பேட்டை, கமண்டல நாதநதி தெரு, வீட்டின் கதவு எண்.68. A/3 பிளாக்கில், T.S.No.53- புல்லு சர்வே எண். A/3 பிளாக் T.S.எண்.53/2 இல், கீழுக்கு மேற்கு 15.50 மீட்டர் (51 அடி), வடக்கு தெற்கு 3.9 மீட்டர் (13 அடி), அகமொத்தம் 663 சதுர அடி அல்லது 61.62 சதுர மீட்டர்க் அமைந்துள்ள குடியிருப்பு நிலம் மற்றும் RCC கட்டிடம் உட்பட. நான்கு எல்லைகள்: T.S.எண்.53/3 இல் அமைந்துள்ள மீதம் உள்ள அங்கமுத்து கவுண்டர் சொத்துக்கு வடக்கு, தனபால் மேல்தரி வீட்டிற்கு கீழுக்கு, தெருவிற்கு மேற்கு மற்றும் பிச்சாண்டி வீட்டிற்கு தெற்கு.

வசூலின் நிலை : பிரிக்கப்

நிர்ணயிக்கப்பட்ட விலை	ரூ. 16,25,000/-	டேவணித் தொகை	ரூ. 1,62,500/-	ஏல உயர்வு தொகை	ரூ. 25,000/-

மின் ஏல தேதி மற்றும் நேரம் 07.07.2026 அன்று மதியம் 2.00 மணி முதல் 6.00 மணி வரை
வரம்பற்ற 10 நிமிட அவகாசத்துடன் மின் ஏலம் நடைபெறும்

சொத்தினை பார்வையிடும் தேதி : 19.06.2026 (நேரம் காலை 10.30 மணி முதல் மாலை 3.30 மணி வரை)
டேவணித் தொகை செலுத்துவதற்கான கடைசி நாள்: 07.07.2026

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு **https://www.bankofbaroda.in/e-auction.** என்ற இணையதள இணைப்பை பார்க்கவும்/வருவதரவும். மேலும் ஏதேதாரர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி தொலை பேசி எண். 04173-227633 மற்றும் செல் : 88070 25024 மற்றும் 9677075502 தொடர்புகொள்ளலாம்.

தேதி : 09.06.2026
இடம் : ஆரணி

அதிகாரப்பூர்வ அலுவலர், முதன்மை மேலாளர்/
பேங்க் ஆஃப் பரோடா